<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 02.09.2025

**அசல் வழக்கு எண்.208/2012**

**வா.சா.1 – வில்சன் பால் ஆரோக்கியராஜ், த/பெ.ஆரோக்கிய சாமி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

<u>**குறுக்கு விசாரணை**</u>

பிரதிவாதிகள் கூர்ச்சிட்டு அடிப்படையில் தான் கிரயம் செய்து கொடுத்தார்கள் என்று நீங்கள் நான்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றீர்கள் அதனை நீங்கள் குறியீடு செய்யவில்லை ஏன் குறியீடு செய்யவில்லை என்றால் தெரியாது. மேற்படி நான்கு ஆவணங்களிலும் வழக்கு சொத்து கவர் ஆகவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான்கு ஆவணங்களும் திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் வழக்கில் நீங்கள் குறியீடு செய்து உள்ளீர்கள் என்றால் சரி இல்லை. 18/3 என்கிற ஆவணம் மட்டுமே குறியீடு செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்து பிரதிவாதிக்கு கூர்ச்சீட்டில் ஒதுக்கப்படவில்லை அது தெரியுமா தெரியாதா என்றால் ஒதுக்கி உள்ளார்கள். உங்கள் அப்பா ஆரோக்கியசாமி நான்கு செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதியுள்ளார்களா என்றால் எழுதியுள்ளார். மேற்படி மூன்று செட்டில்மெண்ட் ஆவணங்களும் திருப்பெரும்புதூர் நீதிமன்ற வழக்கில் நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த மூன்று செட்டில்மெண்ட் ஆவணங்களும் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது படித்து பார்த்தீர்களா என்றால் செல்லாது என்று சொல்லவில்லை. இப்பொழுது தாக்கல் செய்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனக்கு கிடைத்த கூர் சீட்டு பாகத்தின் அடிப்படையில் உங்களுக்கு செட்டில்மெண்ட் எழுதுகிறேன் என்று குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. உங்களுடைய வாக்குமூலத்தில் மூதாதையர் சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது கூர் சீட்டு முன்னிலைக்கு கிடைத்தது என்று சொல்லவில்லை என்றால் சரியில்லை. கூர் சீட்டு வாயிலாக கிடைத்தது செல்லாது என்று ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது அதை மறைத்து மீண்டும் நீங்கள் இந்த வழக்கிலும் அவ்வாறு கூறுகிறீர்கள் என்றால் சரியில்லை. அசல் கூர்ச்சீட்டினை நீங்கள் திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தீர்கள் அதனை மீண்டும் பெற்று இந்த வழக்கிலும் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்து பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து அதில் உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.